**<u>Sub Court, Eraniel</u>**

**O.S. No.80/2019**

Date: 15.09.2025.

வா.சா.1 - திரு. பத்மநாபபிள்ளை

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதி நாகராஜன் வீடு கட்டுவதற்காக என்னிடம் ரூ.5 லட்சம் கடன் கேட்டார் என்றால், சரியல்ல. அதற்கு நான் 100 ரூபாய்க்கு 5 ரூபாய் வட்டி தரவேண்டும் என்றும், 100 நாளில் பணத்தை திருப்பி தரவேண்டும் என்று கூறினேன் என்றால், சரியல்ல. குறைந்தது தினமும் நான் ரூ.750/– தரவேண்டும் என்றும், அசல் பத்திரமும் , கிரைய ஒப்பந்தமும் எழுதி தரவேண்டும் என்று நான் கூறினேன் என்றால், சரியல்ல. பிரதிவாதி அதற்கு சம்மதித்து 15.09.2014 அன்று கிரைய ஒப்பந்தம் எழுதி தந்து ரூ.4,50,000/– கடன் வாங்கினார் என்றால், கடன் என்பது சரியல்ல. கிரைய ஒப்பந்தம் எழுதி தந்தார். மீதம் உள்ள ரூ.50000/– த்தை விஜயகுமாரிடம் கொடுப்பேன் என்று நான் சொன்னேன் என்றால், மீதி ரூ.50000/– யை விஜயகுமாரிடம் நான் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–2 ல் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் அல்ல என்றால், சரியல்ல. வா.சா.ஆ–2 ல் உள்ள விபரங்களை எழுதியது நான் தான். பிரதிவாதி டாஸ்மார்க் பார் நடத்திவருகிறார் என்றால், சரிதான். அவர் ரூ.750 வைத்து 100 நாட்கள் என்னிடம் கட்டினார் என்றாலும், மீதி பணத்தை கட்டவில்லை என்றாலும், சரியல்ல. பிரதிவாதி என்னிடம் மீண்டும் 100 நாள் அவகாசம் கேட்டார் என்றால், சரியல்ல. அதற்கு நான் , மீண்டும் ஒரு கிரைய ஒப்பந்தம் எழுதி தரவேண்டும் என்று கூறினேன் என்றால், சரியல்ல. 05.01.2015 ல்

பிரதிவாதி இரண்டாவதாக ஒரு கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தார் என்றால், சரியல்ல. அதற்கு பிறகு பிரதிவாதி ரூ.750/— வீதம் 40 நாட்கள் செலுத்திவந்தார் என்றால், சரியல்ல. மேரி கிறிஸ்டல் ஜெயந்தி என்னுடைய மகனிடம் ரூ.3 லட்சம் கடன் வாங்கி, 08.09.2017 ல் ரூ.3,75,000/— பணத்தினை திருப்பி கொடுத்தார் என்றால், சரியல்ல, மருந்து விற்பனையில் உள்ள கொடுக்கல் வாங்கல் பண பரிவர்த்தனை இருந்தது. எனது மகன் மெடிக்கல் ஸ்டோர் வைத்திருக்கிறான். அவ்வாறு நான் தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. எனது மனைவி பெயர் சாந்தகுமாரி என்றால், சரிதான். சாந்தகுமாரி , குலசேகரபெருமாளுக்கு பணம் கடன் கொடுத்தார் என்றால், குலசேகர பெருமாள் எனது class mate அவருக்கு நான் ரூ.25000/— கொடுத்தேன். சொத்திற்கு முன்பணமாக கொடுத்தேன். நான் , ரூ.1 லட்சத்தினை எனது மனைவியின் மூலமாக குலசேகரபெருமாளுக்கு வட்டிக்கு கொடுத்தேன் என்றால், சரியல்ல. நான், எனது மனைவி மற்றும் மகன் ஆகியோர் பணத்தை வட்டிக்கு கொடுக்கும் தொழில் செய்துவருகிறோம் என்றால், சரியல்ல. கிரைய ஒப்பந்தில் குறிப்பிட்டுள்ள பட்டிகை சொத்தில் டாஸ்மார்க் கடை மற்றும் பார் உள்ளது என்றால், சரிதான். வழக்கு பட்டிகை சொத்தை பிரதிவாதி என்னை விலைக்கு வாங்க சொன்னார் என்றால், சரியல்ல, சொல்லியிருந்தால் வாங்கியிருப்பேன். நான் பணமும் , வட்டியும் போதும் என்று சொன்னேன் என்றால், வாங்கிய ரூபாயும், சொத்தும் தராத காரணத்தால் வட்டியுடன் திருப்பி கேட்டேன். பிரதிவாதி பட்டிகை சொத்தை அவரின் அண்ணன் பெயருக்கு விலைக்கு கொடுத்துள்ளார் என்றால், சரிதான். அதற்கு பிறகு தான் அந்த சொத்து பற்றுகை செய்யப்பட்டது என்றால், சரியல்ல. நான் டாஸ்மார்க் கடையில் உள்ள வாடகையை எனக்கு தரவேண்டும் என்று நான் டாஸ்மார்க்கு

நிறுவனத்திற்கு புகார் எழுதினேன் என்றால், சரிதான். டாஸ்மார்க் கடையை அடைப்தற்கு நான் பொதுமக்களை கூட்டி போராட்டம் நடத்தினேன் என்றால், Communist party நடத்தினார்கள் நான் அதற்கு போனேன். அதனால் அந்த டாஸ்மார்க் கடை அதிக நான் பூட்டியிருந்தது என்றாலும், அதனால் பிரதிவாதிக்கு கடனை திருப்பி அடைக்க இயலவில்லை என்றாலும், சரியல்ல. எனக்கு வட்டி கிடைக்கவேண்டும் என்று காலம் தாழ்த்தி தாக்கல் செய்தேன் என்றால், சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பிறகு, கிரைய ஒப்பந்தம் என்பதால் நான் வட்டி கேட்கமுடியாத என்றால், சரியல்ல. பிரதிவாதி என்னிடம் வாங்கிய ரூ.5 லட்சத்திற்கு , ரூ.1,05,000/- திருப்பி செலுத்தியிருக்கிறார் என்றால், சரியல்ல. நான் உண்மை விபரங்களை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.